நாம் அதற்கு இணையான நிதியை வழங்க வேண்டும். மத்திய அரசு *50* சதவிகிதம், மாநில அரசு *40* சதவிகிதம், பயனாளிகள் *10* சதவிகிதம் என்ற வகையில் கட்டுகின்ற அந்த வீடுகளை மிக அதிகமாகப் பெறுவதற்கு தமிழக அரசு முயற்சி செய்யுமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னவாறு *2002-2003* ஆம் ஆண்டு வரை ஆயிரம் வீடுகளும், *2002-2003* தொடர் ஆண்டில் *6,250* வீடுகளும், *2003-2004* ஆம் ஆண்டு *5* ஆயிரம் வீடுகளும் கட்டுவதற்காக திட்டமிட்டு பணியாற்றினாலும் பயனாளிகள் *4* ஆயிரம் ரூபாய் கட்டினால்தான் இந்த நிதியைப் பயன்படுத்தக்கூடிய நிலை இருக்கிறது. அந்த வகையில் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நினைக்கின்ற வகையிலே குடிசைகளை எல்லாம் வீடுகளாக மாற்றுகின்ற பணியை தமிழக அரசு கண்டிப்பாக செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. எஞ்சிய வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) மது விற்பனையில் அரசு எடுத்துள்ள முடிவின் நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மது விற்பனையில் அரசு எடுத்துள்ள முடிவின் நிலை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக டாக்டர் பொன்முடி, திரு. எ.வ. வேலு, திரு. இ. புகழேந்தி, திரு. எஸ்.ஏ.எம். உசேன், திரு. ப. ரங்கநாதன், திரு. இரா. திருமாவளவன், திரு. ஜி.கே. மணி, திரு. பரிதி இளம்வழுதி ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. லா. சந்தானம் அவர்களும், கவன ஈர்ப்பாக திரு. சி. ஞானசேகரன், திரு. கே. ஆறுமுகம் ஆகியோரும் அறிவிப்புகளைக் கொடுத்துள்ளார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். தி.மு.க. சார்பில்... (குறுக்கீடு)